சைவ மாநாட்டுச் சிறப்பிதழ்

சைவ பரிபாலன சபை வெளியீடு.
ஆரம்பம்: விரோதி ஞ (1889) ஆவணி மீ 28-ந் திகதி

உ
சிவமயம்

செய்தித்தாளாகப் பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

Hindu Organ

புத்-94] யாழ்ப்பாணம்:- துந்துபி ஹூ, புரட்டாதி மீ 17, 24-9-82 வெள்ளிக்கிழமை பிரதி விலை: ரூபா 1/— [இல-8

RECEIVED ... Jaffna Sri Lanka ... Library

வையகம் துயர் தீர உயிரினம் ஊன்றி ஓங்க

# மெய்ப்பொருள் விளக்கும் மேன்மைகொள் சைவம்

## அரிதினும் அரிது மானிடராதல்; அதனினும் அரிது சிவநெறி திகழ்தல்.

திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட சிவனடியார்களின் வரலாற்றிலே திரண்ட பொருள் ஒன்றுண்டு. சிவநெறி நிற்றலே செம்மை என்பது அது. இந் நெறியில் நிற்பவர்களே சைவ சமயிகளாவர். சமய குரவர்கள், சந்தான குரவர்கள், திருத்தொண்டர்கள் என்ற வரிசையிலே ஞானப் பேரொளி பரப்பிய சிலர்கள் வாழ்ந்தகாலம். எக்காலத்துக்கும் ஒரு முன்மாதிரியான நன்முறைக்காலமாகும். திருக்கோயில்கள் ஊர்கடோறும் திகழ்ந்திலங்கின. நித்திய நைமித்தியங்கள் உத்தமமான முறையில் நிகழ்ந்தன. வேதம் ஓதும் வேதியர் சிறந்தனர். சைவ நெறி நின்ற மன்னர்கள் தாரணியிற் செங்கோலோச்சினர். புனித வழியிற் பொருளீட்டிப் பொன் வளம் கொழிக்கும் வணிகர் வாழ்ந்தனர். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்த பழங்குடி மக்கள் பரவியிருந்தனர். சைவ நீதி சாலச்சிறந்தோங்கியது.

இந்தப் பொற்காலம் ஏதோ வகையில் மாறிவிட்டது. சிந்தாகுலம் மக்களைச் சீர்குலைய வைக்கின்றது. உண்மையை அறிந்தும் உளச் செருக்காற் பொய்மையைப் போற்றும் அளவுக்குப் புன்செயல்கள் தலை தூக்கித் தாண்டவம் ஆடுகின்றன. பழி பாவம், பாதகம் என்ற எண்ணமே இல்லாமற் புலன் வழிச் சென்று புன்மையாளர்களாய் விட்டனர் மக்கள்! இவ்வாறான காலம் ஒன்று உருவாகவிடும் புறமதத் தாக்குதலினால் என்று உற்றுணர்ந்து நாவலர் நற்றகையார் இரவு பகலாக இந்த இன்னல் எய்தா வண்ணம் மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டனர். உதாரண புருடராக உண்மைச் சைவராக வாழ்ந்தார். வாழ்ந்த நெறியை மற்றையோருக்கும் எடுத்துக் காட்டினார். வருஞ் சந்ததியாருக்கு வழி காட்டப் போத புத்தகங்களை வெளியிட்டனர். கோயில்கள் தோறும் சென்று புராணபடனம் செய்து சமய வரலாற்றை மக்களை அறியவைத்தனர். சைவநெறியிற் கல்வி புகட்டப் பாடசாலைகள் தொடக்கித் தூயபணி ஆற்றினர்.

அந்த மகான் காலமும் வந்தடைந்தது. ஆனால் அவர் செய்த தெய்வப் பணியின் பயன் நின்று நிலவியது. கல்விமான்கள் நாவலர் போதனைகளைப் படித்தனர்; அவற்றிலே மனம் படிய வைத்தனர். சங்கம் அமைத்தனர். சற்போதனைக்குரிய சாதனங்களை ஆக்கினர்.

அந்த எழுச்சிதான் அன்றொருநாள் இற்றைக்குத் தொண்ணூற்று மூன்றாண்டுகளுக்கு முன் சைவ சமய பரிபாலன சபையாக முளைத்துப் பயிராகி வேரூன்றி விருட்சமாகி நன்னெறி நிழல் பரப்புகின்றது; அந் நிழலின் ஒரு அநுபவமே ஆண்டுதோறும் அமைக்கப்படும் சைவ மாநாடு.

> கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி — சைவம்
> கரையிலாக் கருணைமாக்கடல் — சைவம்
> மற்றவர் அறியா மாணிக்க மலை — சைவம்
> மதிப்பவர் மனமணி விளக்குச் சைவம்
> செற்றவர் புரங்கள் செற்றஅம் சிவனைக்
> கண்டுகொள்ளவும் கொண்டுள்ளங் குளிரவும்
> வைப்பது சைவம்.

என்றெல்லாம் சைவ மாநாட்டின் மூலமும் இந்து சாதன எழில் வெளியீட்டின் வாயிலாகவும் பணியாற்றி வருகின்றது யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை.

நாவலர் மருகர்மணி வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை நாளுக்குத் தொடக்கி நல்லாற்றில் நாட்டி வைத்த சைவ பரிபாலன சபை தொண்ணூற்று நாலாம் ஆண்டில் நடத்தும் தூய எழுச்சி மாநாடு இன்று ஆரம்பமாகின்றது.

(வளர்ச்சி 4 ம் பக்கம்)

### சைவ மகாநாட்டின் சார்பாக விசேட கருத்தரங்கு

A / L வகுப்பில் இந்து நாகரிகம் கற்கும் மாணவர்களின் நன்மை கருதி 26-9-82 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தத்துவ அரங்கு நடைபெறும். பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

இடம்: நாவலர் ஆச்சிரம மண்டபம்
(நீராவியடி)

### சைவத்தைப் பேணும் தனிப்பெரும் பத்திரிகை

துர்க்கா துரந்தரியின் தூய வாக்கு

நல்லை நகர் ஆறுமுகநாவலர் பெருமானின் சீரிய பணியை என்றும் நினைவூட்டிக் கொண்டிருப்பது "இந்துசாதனம்" என்னும் வார இதழ் என்பதை யாவரும் அறிவர். இப்பத்திரிகை எமது சைவமக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக எந்தவித இடையீடுமின்றி இவ்விதழ் வெளிவந்துகொண்டிருப்பது ஒரு தெய்வீகச் செயலாகும்.

மலேசியா சிங்கப்பூரில் வாழும் இலங்கைச்சைவமக்கள் விரும்பிப் படிக்கும் சிறந்த பத்திரிகை இதுவாகும். இன்று ஈழத்துச்சைவ மக்களின் ஒரே குரல் இது

வளர்ச்சி 6 ம் பக்கம்

### மெய்ப்பொருள்கூறி மகிழ் மாநாடு

''இறை — ஒளி''

வானுடர் காணாத மன்சிவனும் வைதீகக் கோனுரின் மெய்பொருள் கூறிமகிழ் — மாநாடு சைவபரி பாலன சற்சபையின் சால்பாகும் உய்வடையும் கண்டிவ் வுலகு.

### சபைத்தலைவர் வழங்கும் ஆசிச் செய்தி

பரிபாலனம் செய்வதிலே பண்பாடான முறை சற்பிரசங்கங்கள் செய்வித்து மக்களை நல்வழியில் ஊக்குவிப்பது

1898ம் ஆண்டு ஆரம்பமான எங்கள் சபை இந்தப் புனிதப்பணியை இயன்றளவு அமைவாகச் செய்து வருகின்றது.

எங்கள் தாய்நாட்டுப் பேரறிஞர்கள் பலர் சைவமாநாட்டுத் தலைவர்களாகப் பெருந் தொண்டாற்றி வந்திருக்கின்றனர்.

இவ்வாண்டு எங்கள் நாட்டுக் கலாநிதி பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்களே தலைமைக்குரியவரென ஏகமனதாக



எங்கள் நிர்வாகசபை முடிவுசெய்து அங்கத்தவர்கள் பலர் இது நன்று என்று ஆமோதித்தனர். காரணம் யாழ் பல்கலைக் கழக இந்துநாகரிகத்துறைப் பேராசிரியராக மட்டுமன்றி கிரியாமார்க்கத்தில் வேதாகம விதிமுறைகளை நடைநெறிப் படுத்துவதில் ஓர் சிறந்த ஆசானாக விளங்குபவர் எங்கள் கலாநிதி எனவே இம்மகாநாட்டுக்கு ஓர் தனிச் சிறப்புண்டு என்றுகூறி அதற்கான இந்துசாதன விசேடவெளியீட்டுக்கு வாழ்த்துரைக்கின்றேன்.

ச. செல்வராசா

## நாதசுர கான சங்கீதத்துக்குச் சஞதிபதி விருது

வீணை கானம் என்று யாழ்ப்பாணத்தை வியந்துரைப்பர் வரலாற்று நூலோர்; யாழ்ப்பாடியின் கானஞானத்துக்குப் பரிசானது யாழ்ப்பாணம் என்றமையால் என்பர். இந்தக் கான பூமியில் இசைத்திறன் எவ்வளவு அமைந்திருக்கின்றது என்பதற்கு இசை வல்லுநரின் வரவாறே சான்று.

மாசில் வீணையின் பத்தை ஈசனெந்தை பிணையடி நீழற்கொப்பாகும் என்று வாகீசர் திருவாய் மலர்ந்தனர்; அத்த கான நாதசுர இன்பம் அத்தனின் அடிநிழல் அமைதி போன்றது என்று சொல்லலாம்.

அர்ச்சனை பாட்டேயாகும், நாதசுர ஞான மேதைகள் இராகம் எடுத்து மேலும் பதம் கீதம் முதலியனவற்றைக் கையாளும்போது தேவாரம், திருவாசகம், திருப்புகழ் பாடித் தாமும் மகிழ்ந்து கேட்போரையும் மகிழ்விப்பர். இறைவனுக்கேற்ற அர்ச்சனைகளில் இதுவும் ஒன்று.

வேய்ங்குழல் விரும்பிய வேணுகோபாலனும் மெல்லிசையால் மெல்லியரை யெல்லாம் மேலான ஈசன் பால் நேசம் வைக்கச் செய்தான், ஆவினங்கூட இப் பாவின் பத்தில் அமைந்து நிற்கும் அற்புதமும் நிகழ்ந்தது.

இத்தகைய இசைக்கலை அரிஞசனப்பெரு விருதுக்கு அத்தனையும் உரிமையானது. இலங்கைக்கு இறைவன் இராவணேஸ்வரன் கானப் பிரியன் என்று வரலாறு கூறும். எனவே ஆட்சி பீடமும் இசைத் திறனுக்குரிய பரிசு வழங்குவது பொருத்தமே;

இப் பரிசினை இவ் விருதினை எடுக்கும் திறனுடையவர் நாதசுர கான கலாநிதி நா. க. பத்மநாதன் என்பதை காட்டிடும். நல்லிசை நயம் கண்டு களிப்பவர் அறிவர். ஆலய விழாக் காலங்களில் அச் சூழலிலே தென்றற் காற்றுடன் இரண்டறக்கலந்து இன்ப அலை வீச வைக்கும் நாதசுரகான வித்துவமேதைகளிற் றலை சிறந்தவர் கான கலாநிதி பத்மநாதன் அவர்கள். சைவப் பொலிவு தவழும் வதன வனப்புடன் கானலோல பத்மநாதன் நாதசுர இசைக் குழலைக் கையாளும் பொழுதெல்லாம் ஆநந்த மயமே அங்கு நிலவும். இது பெருங்கோயில்களிலே வழிபடும் அடியவர்களின் அநுபவம்.

விருதுக்குரிய வித்

(வளர்ச்சி 5 ம் பக்கம்)

## சைவ சமய பாடப் பரீட்சை 1981. - அகில இலங்கைப் பரிசு.

### தங்கப் பதக்கம் பெறுவோர் விபரம்



வகுப்பு 10 செல்வி இ. இரஞ்சினி
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
தங்கப் பதக்கம்.



வகுப்பு 9 செல்வி செ. நளாயினி
யாழ். காரை. இந்துக் கல்லூரி
தங்கப் பதக்கம்,



வகுப்பு 8 செல்வி ச. அஜந்தா
யாழ். இந்து மகளிர் கல்லூரி
தங்கப் பதக்கம்.

## இந்துக் கட்டடக் கலை.

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பண்டைய இந்தியாவிற் கலை சார்ந்த பொருள்களில் ஏறக்குறைய யாவுமே சமயச் சார்புடையன அல்லது அவை சமய நோக்கத்திற்காக இயற்றப்பட்டவையாகும். உலகியற்கலை அங்கு நிச்சயமாக இருந்தது. அன்று தொட்டு இன்றுவரை இவ்விடயத்தில் ஆழ்ந்து ஈடுபட்டவர்கள் அநேகம். இக்கலைகள் பற்றிப் பலவாறாக எழுதப்பட்டும் கூறப்பட்டும் உள்ளன.

**கலைகளின் வரைவிலக்கணம்:**

கலை என்பது யாது? மனிதனது உள்ளத்தைத் தன் வயமாக்கி, அவ்வளவோடு நில்லாமல் புறத்தே வெளிப்பட்டுத் தோன்றும் ஆற்றலுமாகும். கூடுதல் குறைதலின்றி எப்பொருளும் அளவோடு அமைந்திருப்பின் அந்த அமைப்புக் கண்ணைக் கவருவது இயல்பு. கண்ணையும் கருத்தையும் கவரும் அந்த அமைப்புப் பாராட்டத் தகும் நிலையை அடைகிறது. அப்பொருள் கலையுணர்வோடு அமைக்கப்பட்டது அல்லது படைக்கப்பட்டது என நாம் உணர்கிறோம். இது கட்டடக்கலை, சிற்பம், ஓவியம்முதலிய எந்தக் கலைக்கும் பொருந்துவதாகும். எனவே, கலை என்பது அளவும் பொருத்தமும் தன்னுள் அடக்கி நிற்பது; அதேவேளை உள்ளத்தில் உவகையூட்டுவது; உள்ளத்தைத் தன்பால் ஈர்ப்பது.

கலையாற்றல் உள்ளத்தைக் கவரும் காவியமாக வெளிப்படலாம்; கண்ணைக் கவரும் ஓவியமாக வெளிப்படலாம்; கருத்தைத் தன்பால் ஈர்க்கும் அழகிய கட்டடமாக வெளிப்படலாம்; சிற்பமாக உருவெடுக்கலாம்.

**கலையின் தோற்றம்:**

கலையின் பண்புகள் யாவை? நாகரிகத் தொடக்கத்தில் தவழத் தொடங்கிய பழைய கற்கால மனிதன் தான் வாழ்ந்த குகையில் இருந்த பாறைகள் மீது தன் கைவண்ணத்தைக் காட்டினான். அக்கைவண்ணம் ஓவியங்களாக மிளிர்ந்தது. அவனது உள்ளத்திலிருந்து பொங்கி எழுந்த கலை உணர்வே அவனை ஓவியப் புலவனாக்கியது.

இந்தியக் கட்டடக்கலை சிற்பம், ஓவியம் ஆகியவற்றுக்கு நீண்டவரலாறு உண்டு. தொல்பொருட் சான்றுகள், இலக்கியம், கல்வெட்டுக்கள், நாணயங்கள், சாசனங்கள், முத்திரைகள், சின்னங்கள் முதலிய பல்வேறு சான்றுகள் இவற்றை அறியத் துணைபுரிவன.

**தெய்வத்தின் உறைவிடம்:**

சோலைகள், ஆறுகள், மலைகள், பூங்காக்கள், சிறந்த இடங்கள் முதலிய இடங்களில் தேவர்கள் உறைகிறார்கள் எனப் பழமை வாய்ந்த நூல்களில் ஒன்றான பிருகத் சம்ஹிதை கூறுகிறது. இது மக்கள் தெய்வீகத்தை உணரும் பல்வேறு இடங்களை எடுத்துக் காட்டுகிறது. தெய்வீகம் குடி கொண்டிருக்கும் இடம் சிறந்ததாகவும் அமைதியும் அழகும் நிரம்பியதாகவும் இருப்பது அவசியம். இவ்வாறு தெய்வங்கள் உறையும் இடங்களாகிய குன்றுகள், மலையடிவாரம், காடுகள், சோலைகள், தபோவனம், கிராமம், நகரம், குகைகள் எல்லாம் முக்கியத்துவம் பெற்றன.

**கோயில்கள்:**

தெய்வங்களின் பல்வேறு உருவங்களை அமைத்துக் கோயில் எழுப்ப இத்தகைய இடங்களே தேர்ந்தெடுக்

## தலைமுறை பலகண்ட சைவபரிபாலனசபைச் சிவப்பணி

( திரு. மு. மயில்வாகனம்
சமயப் பிரசார அமைச்சர், சைவபரிபாலனசபை யாழ்ப்பாணம்)

"சைவ பரிபாலன சபையின் சிவப்பணிகள் மேன் மேலும் சிறப்புற்றோங்குக"

யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் ஈழத்திலும், இந்தியாவிலும் தமிழிற்கும் சைவத்திற்கும் அரிய பெரிய தொண்டுகளை ஆக்கியிருக்கிறார். அவருடைய சிந்தனையில் இருந்த பல பணிகளை அவருடைய மாணாக்கர்களும் ஆதரவாளர்களும் அவர் சிவபதம் எய்தியபின்னும் ஆக்கியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை அவருடைய மாணாக்கர்களாலும் பிறராலும் 10-4-1888 ல் ஸ்தாபிக்கப் பெற்றது. அதை ஸ்தாபித்தவர்களுள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களின் மருகர் வித்துவான் த.ச. பொன்னம்பலபிள்ளை, திரு த. கைலாசபிள்ளை, திரு. மூ. பசுபதிச் செட்டியார் ஆகியோர் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர்கள். சபை ஸ்தாபகர்கள் வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் 30-4-1888 அன்று விசேட பூசை வழிபாடு செய்து குத்து விளக்கேற்றி மங்கள

( வளர்ச்சி 6 ஆம் பக்கம் )

## "சிவஞான போதம்"

(சைவசித்தாந்தத் தலைமணி ஞானநூல்)

திரு. மு. கந்தையா அவர்கள், ஏழாலை

சைவஞானத்தின் முடிந்த முடிபு சைவசித்தாந்தம் எனப்படும், இம்முடிபு காலங்கடந்த ஒன்று. காலாதி காலமாக இவ்வுலகில் வாழ்ந்து சிவனே மெய்ப்பொருள் எனத் தமது அநுபூதியிற் கண்டுணர்ந்த ஞானிகளின் உணர்விற் பட்டுக்கிடந்த முடிபு அது. அம்முடிபுக்கு அங்கமான உண்மைகள் பல வேதம், ஆகமம், திருமந்திரம், திருக்குறள், சங்கத் தமிழிலக்கியங்கள் நம் சமயாசாரியர்களின் அருட் பாடல்கள் மற்றும் சைவத் திருமுறைகள் வாயிலாக இவ்வுலகில் நன்கு அறியப்பட்டு வந்துள்ளன. அவற்றுள் வேதம் ஆகமம் தேவார திருவாசகங்கள் மற்றும் சைவத் திருமுறைகள் என்றநான்கும் விசேட தரமாகக் கொள்ளப்படும். அவற்றுள்ளும் வேதம் ஒரு பொது நிலையிலும், மற்றய மூன்றும் சிறப்புநிலையிலும் சைவசித்தாந்தத்துக்கு உரிமை பூண்டுள்ளன.

வேதத்தில் சைவசித்தாந்த உண்மைகள் பல உண்டு, ஆனால் பல சொற்களால் விரித்துரைக்க வேண்டியவற்றை மிகச் சில சொற்களாற்சுருக்கிக் கூறுவது வேதத்தின் சிறப்பியல்பு. அது காரணமாக வேதங் கூறும் சித்தாந்த உண்மைகளுக்கு விளக்கங் கொடுப்போர் தமது சிந்தனை நெறிகளுக்கேற்றபடி விதம்விதமாக வேறுபட்ட விளக்கங் கொண்டு கொடுக்கும் படியாயிற்று. அதனுற்சாஸ்வதமான சித்தாந்த முடிபு இருப்பவும் வேதத்தை ஆதாரமாகக் காட்டி வேறு பல சமய ஞான முடிபுகளுந் தலையெடுத்தன வேறுபாடான இம்முடிவுகளுக்கெல்லாம் வேருகத்தனை க்காட்டிக்கொண்டு தானே சைவசித்தாந்த முடிபுக்கு ஆதார நிலையாக விளங்கியது சிவாகமம் சிவாகமம் கூறும் முடிபாகிய இலக்கணத்துக்கு அநுபவங் காட்டும் இலக்கியங்களாகத் திகழ்ந்தன நமது சமயாசாரியார்களின் அருட்பாடல்களையுள்ளிட்ட சைவத் திருமுறைகள் அத்தனையும்,

இருந்தும், இவற்றைப்

(வளர்ச்சி 5 ம் பக்கம்)

Hindu Organ

Fri. 17, 24-9-82

## PEOPLES' SUPREME POWER

Sri La Sri Arumuga-Navalar, the Champion Reformer of Hindus, though essentially a religious worker, yet went all out to support the candidature of the great Ceylonese of that time, for the seat in the Legislative Council for the educated Ceylonese stating publicly that his duty as a citizen demanded that he should exercise his vote and his persuasive powers to see that the most deserving educated ceylonese should be returned to the Legislative Council.

We however take a different view in the matter of active participation in political elections particularly because the Hindu Organ as the only Journal of the Hindus in this country would do well to steer clear of party affiliation and confine ourselves to the duty of safeguarding the sovereignty of the voter.

Freedom, that picturesque word, has become the cry of almost every single individual; so much so that the concern of political parties for the freedom of the individual becomes a fallacy. This wonderful word, among other interpretations, denotes frankness and outspokenness; Certainly it means civil liberty, power of self-determination or in other words liberty of action.

Subramaniya Bhartiyar, that patriotic bard who mused in numbers as he began to feel inspired for the freedom of Barata from foreign yoke, meaningfully described the people as their own rulers each one of them. It might be that this inspired poet had thought that every citizen had the right to become a ruler of the country as a whole. Otherwise it would be that there could be as many rulers as there were citizens.

However, the essence of this concept lies in the truth that each individual should be left to one-self in the matter of making decisions particularly in political affairs. In religious matters, of course, the tenets of the individuals' religion would be the controlling factor.

Sovereignty is a strange word with a still more elusive significance. Political pandits and philosophers have yet to have access to that sanctum sanctorum, that secret abode where sovereignty is said to lie Without any more quibbling, we would straightaway say that the precious possession of the individual, that power to make and unmake rulers commonly called the vote, has the power of an atom. The voter, to extend the figure of speech employed by Bharatiyar must be deemed to have sovereign powers. His right to decide for himself whether to cast his vote or to whom his vote shall go is supreme and none can question his sovereignty.

If every single individual is to be deemed to have the capacity to become a ruler, then how is it that others, or even political parties can dare think that they can dictate to him what to do

The mass media, now in the plenitude of expansion could well be depended on to give the voter the necessary information, the data, the rules and regulations, the legal issues and all other requirements. Thus fully armed with facts, the voter becomes wholly capable of deciding on what be should do in the case of an election.

In the absence of legal compulsion, the voter may or may not exercise his his vote. Should he decide to use his vote his verdict will be for the person of his own choice. That is where he expects that he should be left to himself.

This will be a sure way to search after the Truth of sovereignity. Let the voter be allowed to set out on this voyage of discovery unhindered by any external influence, individually or collectively

---

### Vivekananda Society President's Message

I congratulate you and the Hindu Organ that is continuing to do good work

A. G. NADARAJAH
Attorney-at-Law

---

## OCTOGENARIAN'S OPINION
# Mahatma Gandhi's Ideology

As is natural, references are made very often to Sri Lanka to the noble and saintly personality of Mahatma Gandhi and his ideals, It is superfluous to add that he is held in very high veneration, if I might say so with the utmost deference. Arising out of this situation, it is important to bear in mind certain aspects relating to Mahatma's procedure adopted in South Africa and in India and his methods of action. It is vital in the interests of Sri Lanka that attention is drawn to some certain aspects of his principles, policy and activities, with this object in view, the following humble submissions are made, the same being out exhaustive on the subject.

Firstly, it is necessary to remember that we do not have and did not have leaders of the calibre to Mahatma Gandhiji. This statement is made with all respect to our leadership. On the occasion of Mahatma Gandhi's Centenary Celebrations in Sri Lanka, I considered it a blessing to have been able to quote the following tribute of Dr. S. Radhakrishnan, Philosopher and World Statesman and President of the Republic of India.

"Possessed and inspired by the highest ideals of which human nature is capable, preaching and practising fearlessly the truth revealed to him leading almost alone what seemed to be a forlorn hope against the impregnable strongholds of greed and folly, yet facing tremendous odds with a calm resolution which yielded nothing to ridicule or danger, Gandhiji presented to the unbelieving world all that is noblest in the spirit of man. He illuminated human dignity by faith in the eternal significance of man's effort. He belongs to the type that redeems the hum an race....

Such men who are filled with spirltual poise and yet take upon themselves the burden of suffering humanity are born into the World at long intervals.

The spirit in him which is a light from above will penetrate far into space and time and inspire countless generations for nobler living."

The substance of this tribute is too high for local application in Sri Lanka. Hence, along with other reasons, the methods of actions and proceedings followed by him in two other countries and under different set of circumstances cannot be automatically followed in Sri Lanka in the present era

Secondly, in India itself there is practically nobody who could be considered the successor of Mahatma Gandhi, Shri Morarji Desai, one time Primo Minister, one of the worthiest men in the world today, when an American Newspaper representative compared him with Mahatma Gandhi, told the interviewer not to dishonour the Mahatma Gandhi by comparing him [Shri Morarji] with that noble personality. Messrs Achariya Bhave and Sri Jayaprakash Narayan also disclaimed to be on the same footing as Mahatma Gandhi and exhorted people not to think or say so.

Thirdly, the situations in South Africa and India where Mahatma Gandhi had to contend against the Boers and the British respectively were entirely different

(continuedin page 4)

---

Letter to the Editor

### Special Archanas for SANEESWARAN

Sir,

It is reported in the "Hindu" newspaper that His Holiness Sri La Sri Ambalavalar Desika Paramachariya Swamigal, revered Head of the Thiruvavaduthurai Atheenam has inaugurated the performance of special archanas for Lord Saneswarar at Suriyanarayanaswamikovil near Mayuram, Tamil Nad, for the prosperity of mankind. This is a very welcome and elevating event. In this context, it is inspiring to recall with gratitude that the title of Navalar was conferred by the self same Thiruvavaduthurai Atheenam decades ago on our Sri La Sri ArumugaNavalar, and that the title so conferred on our illustrious countryman was a source of very great effect and resulted in very meritorious repercussions in the life and career of Sri Navalar [then known as Sri Kandapillai Arumugam] and enabled him considerably to render immense service to the cause of Hinduism [Saivism] with the Grace of Almighty Sivaperman— Doubtless, the performance of the Archanas on the present occasion will prove a blessing to all creation, for which also let us be thankful to the revered Head of the same Atheenam.

*(Sri S. Sivasubramaniam)*
Life Member,
Jaffna Saiva Paripalana Sabhai

---

### HINDU MAMANRAM Hails Hindu Organ
## MESSAGE

It has been given to very few newspapers or journals published in this country to have a span of life exceeding at most a decade or two. Many of them have fallen by the wayside within a few years, if not earlier. To the exceptional category belong the Inthusathanam and the Hindu Organ. It is most gratifying to learn that they will commence their 94th year of publication on the 11th instant

During this period; the two newspapers (which, in recent years, have been consolidated as one, for reason of economy) have played a noteworthy role in the lives of the Hindus of this country especially in the North. The Saiva Paripalana Sabhai, under whose auspices the papers are published. have never sought to interfere with the journalistic independence of the papers and the high traditions set by editors of the calibre of Hon. A. Sabapathy, A.V. Kulasingam, M. S. Eliathamby, V. T. Sambandan and others are being worthily maintained by those in charge at present. It is, perhaps, not well known that the Editors are rendering honorary service.

It is the duty of all Hindus to rally round these papers and give adequate financial support to enable them expand and resume publication as two papers and continue their service to the people, especially as watchdogs of the religious rights of the Hindus.

While conveying to the Management and to the Editors my very warm felicitations on this joyous occasion, I pray for the blessings of the Lord for the continued progress and success of the two papers.

*V. Sivasubramaniam*
President,
All Ceylon Hindu Congress

(1ம் பக்க வளர்ச்சி)

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்"

THE SAIVA PRAKASA PRESS

சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே.

## சைவ பரிபாலன சபை - யாழ்ப்பாணம்

## அகில இலங்கைச்

# சைவ மாநாடு

(புண்ணியநாச்சி தரும அறக் கட்டளை)

காலம்: துந்துபி ஞூ புரட்டாதி மீ 8, 9, 10

வெள்ளி, சனி, ஞாயிறு
(24, 25, 26-9-82)

இடம்: சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

சைவ அபிமானிகள் அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்,

ச. செல்வராசா — தலைவர்
மு. மயில்வாகனம் — சமயப்பிரசார அமைச்சர்
த. சண்முகலிங்கம் — காரியதரிசி
வ. கந்தசாமி — மகாநாட்டு அமைப்பாளர்

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்.

12-9-82.

### புரட்டாதி மீ 8 உ 24-9-82 வெள்ளிக்கிழமை

காலை 9-00 மணி வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் விசேட ஆராதனை.

10-00 நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருமுறைப் பூசையும் பாராயணமும்.

11-00 கந்தபுராண படனம்.

12-00 மணி தேவாரம்

பிற்பகல் 4-00 மணி

தலைவர்:
பேராசிரியர், கா. கைலாசநாதக்குருக்கள் அவர்கள்
தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

4-00 — 4-10 பூசை

4-10 — 4-45 திருமுறை ஓதுதல் —
(1) வண்ணை சாந்தையர்மடக் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் - சைவசமய அபிவிருத்திக் கழகம்

4-45 — 5-00 (2) யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள்

5-00 மாநாட்டை மங்கலவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தல்
சிவநெறிப்புரவலர் க. கனகராசா அவர்கள் J. P.

5-00 — 5-15 சாந்தி மங்களபாடம்
நியாயசிரோமணி
பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணியசாஸ்திரிகள்

5-15 — 5-30 வரவேற்புரை
திரு. நம சிவப்பிரகாசம் அவர்கள்
உபதலைவர்: சைவபரிபாலனசபை, ஆசிரியர் 'இந்துசாதனம்'

5-30 5-45 ஆசியுரை
நல்லை, ஞானசம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

5-45 — 6-15 தலைமைப் பேருரை

6-15 — 6-45 விரிவுரை
பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
"வேதாகமங்கள் காட்டும் நெறி"

6-45 — 7-30 திரு ச. விநாயகமூர்த்தி அவர்கள்
விரிவுரையாளர், ஆங்கிலப் பகுதி
யாழ். பல்கலைக் கழகம்
'திருவாசகமென்னும் தேன்'

7-30 — 8-30 பண்ணிசை
பண்ணிசைப் புலவர் வே. சிவஞானம் அவர்கள்

8-30 தேவாரம்.

### புரட்டாதி 9உ (25-9-82) சனிக்கிழமை

காலை: தலைவர்:
திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள்
ஆசிரியர் இந்துசாதனம்

9-00 பூஜை தேவார பாராயணம்

9-30 திருமுறை ஓதுதல்
சைவ பரிபாலன சபை பண்ணிசை வகுப்பு மாணவர்கள்

9-30 — 10-00 தலைமைப் பேருரை

10-00 — 1-00 இளைஞர் அரங்கு

தலைவர்: திரு. மா. வேதநாதன் B. A. (சிறப்பு)

1. நாவலர் காட்டிய நன்னெறி—தலைவர்

2. அப்பர்
திரு. இ. தர்மகுலசிங்கம்
ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய்

3. சம்பந்தர்
திரு. இ. ஜெயராஜ்
கம்பன் கழக இயக்குநர்

4. சுந்தரர்
திரு சி. தவநாயகம்
யா. இ. கல்லூரி

5. மாணிக்கவாசகர்
திரு. சிவலிங்கம் B. A.

1-00 தேவாரம்

#### மகளிர் அரங்கு

மாலை: தலைவர்:
சிவத்தமிழ்ச்செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

4-00 — 4-30 திருமுறை ஓதுதல்
யா./இந்துமகளிர் கல்லூரி மாணவிகள்

4-30 — 5-00 தலைமைப் பேருரை

5-00 — 5-40 விரிவுரை
திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
விரிவுரையாளர், ஆசிரியர்பயிற்சிக்கலாசாலை கோப்பாய்
"காரைக்கால் அம்மையார்"

5-40 — 6-20
திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள்
"திலகவதியார்"

6-20 — 7-00
செல்வி புஷ்பா செல்லநாயகம்
ஆசிரியர், யா./இந்து மகளிர் கல்லூரி
"மங்கையர்க்கரசியார்"

7-00 — 8-00
பண்ணிசைமணி திரு. S. தில்லைமணி
நல்லை ஆதீன ஓதுவார் மூர்த்திகள்
"பண்ணிசை"

### புரட்டாதி 10உ (26-9-82) ஞாயிற்றுக்கிழமை

#### தத்துவ அரங்கு

காலை: தலைவர்
பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் அவர்கள்

9-00 பூஜை தேவார பாராயணம்

9-15 — 9-30 திருமுறை ஓதுதல்:
— யாழ். சைவசமய அபிவிருத்திக்கழகம், நாயன்மார்கட்டு

9-30 — 10-00 விரிவுரை
"இந்து நாகரிகம் ஒரு வரலாற்று நோக்கு" — தலைவர்

10-00 — 10-40 வேதங்காட்டும் நாகரீகம்
பிரம்மஸ்ரீ ப. சர்வேஸ்வரஐயர் M. A. அவர்கள்

10-40 — 11-20 இந்து தத்துவ வரலாற்றில் உபநிடதங்கள்
பிரம்மஸ்ரீ நா. சுப்பிரமணிய ஐயர் M. A. அவர்கள்
விரிவுரையாளர் தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்

11-20 — 12-00 இந்துசமய மரபில் ஆகமங்கள்
கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்

12-00 — 12-30 கலந்துரையாடல்

12-30 — 1-10 "சிவாகமங்கள்"
கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்

தேவாரம்

மாலை: தலைவர்: திரு ச. செல்வராசா அவர்கள்
சைவபரிபாலன சபை

4-10 — 4-30 திருமுறை ஓதுதல்
யா./வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்

4-30 — 5-30 தலைமைப் பேருரை

5-30 — 6-00 பண்ணிசைப்போட்டியில் பரிசுபெற்றவர்கள்

6-00 — 6-15 சைவ சமயபாடப் பரீட்சை, பண்ணிசைப் போட்டி என்பவற்றில் அகில இலங்கைப் பரிசு பெறுபவர்களுக்கு பரிசு வழங்கல்

பரிசு வழங்குபவர்:- திரு. பொ. ச. குமாரசாமி அவர்கள்
அதிபர், யாழ். இந்துக்கல்லூரி

6-15 — 7-00 விரிவுரை
பண்டிதை திருமதி ச. அமிர்தாம்பிகை சதாசிவம் B. A.
"தற்காலச் சைவரும் — சைவ சமயமும்"

7-00 — 7-40 விரிவுரை திரு. க. சிவராமலிங்கம் B. A.
யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்
"சேக்கிழார் செந்தமிழ்"

7.40 — 8.00 நன்றியுரை செயலாளர்

8-00 "பண்ணிசை"
இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை

பண்ணிசைப் போட்டிக்கு தங்கப்பதக்கப் பரிசு வழங்கியவர்:
மலேசியா. திரு. S. துரைரத்தினம்.
ஆனந்தக்குமாரசாமி ஞாபகார்த்தநிதி.

---

## கருத்தரங்கு

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்

க. பொ. த. உயர்தர வகுப்பில் இந்து நாகரிகம் கற்கும் மாணவர்களுக்கு 26-9-82 ஞாயிறு முற்பகல் 9-00 மணியளவில் இந்து நாகரிக பாடக் கருத்தரங்கு விசேடமாக நடைபெறும்.

மாணவர்களும் — ஆசிரியர்களும் பங்குபற்றிப் பயன் அடைவார்களாக.

---

வட்டுக்கோட்டை - சங்கரத்தை அருள்மிகு முருகமூர்த்தி ஆலய

### புனருத்தாரணத் திருப்பணி

சங்கரத்தைக் காந்தைக் குளலத்தை என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்து, அடியார்க்கு அருள்சுரக்கும் கலியுகவரதனும் கந்தப்பெருமானின் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதற்குத் திருவருள் பாலித்துள்ளது. இத்திருப்பணி வேலைகளை சிறப்புடன் பூர்த்தி செய்ய பெருநிதி வேண்டும் என்றும் இத்திருப்பணியில் மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம், வாகனசாலை, களஞ்சியஅறை, மடைப்பள்ளி ஆகியவற்றின் புனருத்தாரண வேலைகள் முக்கியத்துவம் பெறுகின்றனவென்றும் சட்டத்தரணி S. R. கனகநாயகம் அவர்களைத் தலைவராகவும், N. இரத்தினசிங்கம் அவர்களை உபதலைவராகவும், திரு. பா. சண்முகம் அவர்களைச் செயலாளராகவும் திரு. க. மகேஸ்வரன் அவர்களை உபசெயலாளராகவும், வே. பரமேஸ்வரன் அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட குழு அறிவிக்கின்றது.

---

### Gandhi's . . .

continued from page 3

from the circumstances and conditions prevailing both in India and Sri Lanka at present. Both our countries [India and Sri Lanka] have regained their National Independence and are not pitted against any foreign country.

Fourthly, it is important to re-collect that Mahatma Gandhi led a loyal and full-time life of total dedication and self sacrifice for his country He led a life of poverty and celibacy. He had given up his legal practice and undergone immense suffering.

[to be continued]

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் வழங்கிய

## ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் நடாத்தும் அகில இலங்கைச் சைவமகாநாட்டினை முன்னிட்டு வழங்கும் ஆசிச் செய்தி:

மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் விளங்கச் செய்வதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காட்டிய நன்னெறியில் நின்று நூற்றாண்டுகாலம் சைவப்பணி புரிந்து வருவது யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஒன்றே

சைவசித்தாந்த மெய்ந்நெறியே குறிக்கோளாகக் கொண்டு காலந்தோறும் தோன்றி மறையும் சமயப் பிறழ்வுகளிற் சிக்காது, சைவ மெய்ந்நெறி இதுவென உலகு அறிந்து கடைப்பிடித்து ஒழுகப் பெருநெறி காண்பித்து விழா எடுத்து வரும் பெருமை சைவ பரிபாலன சபை ஒன்றற்கே உரியது.

முத்திதரும் தெய்வசபையைக் காண்பதற்குச் சேர வாருங்கள் என அழைக்கும் பெருநோக்குடையது சைவநெறி ஒன்றே. 'சிவன் என்ற நாமம் தனக்கே உரிய செம்பவள மேனி கொண்ட இறைவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளது சைவநெறி ஒன்றே. மற்றைய தெய்வங்களை சில வேதனைப் படும், இறக்கும், பிறக்கும் பின் வினையும் செய்யும்'. ஆகவே பொய்ந்நெறி புகுதாமல் மக்களைப் பாதுகாத்து சமயாதீதப் பழம் பொருளாகிய பரமேஸ்வரனை ஆன்மாக்கள்சென்றடைந்து நிரதிசய இன்பத்தை என்றும் இடையறாது நுகர வழிசெய்வதும் சைவமெய்ந்நெறி.

அம்மெய்ந்நெறியை, வைதிக ஒழுக்கநெறி நின்ற முன்னோர் வாழையடி வாழையாகப் பேணிவந்த மரபில் இவ்வாண்டிலும் புரட்டாதி மாதம் 8ம், 9ம், 10ம் திகதிகளிற் சைவபரிபாலன சபையார் சைவ மகாநாடு ஒன்றை நடாத்த எடுத்த பெருமுயற்சிக்கு, அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம் தனது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கிறது. சிறப்பாகச் சைவப்புலவர், பட்டதாரிகள் சங்கச் செயலாளர் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி மகாநாட்டு அமைப்பாளராகவும், மூதுபெரும் சைவப்பேரறிஞரும், சமயப்பிரசார அமைச்சரும், சைவப் பெரியாருமான திரு. மு. மயில்வாகனம் அவர்கள் தமது உடல், பொருள், ஆவியத்தனையும் சைவ மெய்ந்நெறிக்கென்றே அர்ப்பணித்துச்செயலாற்றி வருவதும் குறிப்பிடத் தக்கது. சைவ பரிபாலன சபைத்தலைவர் சட்டத்தரணி திரு. ச. செல்வராசா அவர்களும், கௌரவ செயலாளரான திரு. த. சண்முகலிங்கம் அவர்களும் இம்மாநாட்டை நிறைவேற்ற எமது உள்ளம் கனிந்த நல்லாசிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

இ. திருநாவுக்கரசு
தலைவர்.

## சிவஞானபோதம்

(2ம் பக்கத்து வளர்ச்சி)

பராமுகம் பண்ணிக் கொண்டு வேதஞ்சார்பாக எழுந்த வேறுபட்ட முடிவுகளை இனங் கண்டு கொள்ளமாட்டாமல் அம்முடிபுகளையும் முடிந்த முடிவுகளாக மேற்கொண்டு அம்முடிபுகளைச் சைவசித்தாந்த முடிபோடு சமர் பொருத விட்டுக்கொண்டிருந்த ஒரு தளப்பநிலைக்கும் கடந்தகால கட்டத்தில் ஒரு இடம் இருந்தே வந்துள்ளதாகத் தெரிகின்றது பிரதானமாக சங்கராசாரிய சுவாமிகளின் மாயாவாத விளக்கம் தலையெடுப்பாயிருந்த கி.பி. 8 ஆம் 14 ஆம் நூற்றாண்டுகளின் இடைவில் இத்தளப்பநிலை மிக்கிருந்ததாகக் கொள்ளற்கிடனுண்டு.

இக்கட்டத்தில் இத்தளப்ப நிலைக்கிடனின்றிச் சமய ஞான வேட்கையுடையார் இடத்தே சிவாநுபவப் பேறுபற்றிய விளக்கத்தில் ஒரு ஸ்திர நிலையை ஆக்குதற்கென்று கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் அவதரித்தவர் ஸ்ரீ. மெய்கண்டதேவ நாயனார்.

அது தெய்வம், இது தெய்வம், என மலைந்து கொள்வார் மலிந்திருந்த ஒரு கட்டத்தில் அதுவுமல்ல இதுவுமல்ல சிவமே முதல் மற்றைய தெய்வமெல்லாம் அதன் ஆணையில் அடங்குவன எனக் காட்டிச் சிவபரத்துவ மேன்மையை நிலைநிறுத்த வந்த திருஞானசம்பந்தர் போல அது முடிபு, இது முடிபு; என மலைவார் மலிந்த காலகட்டத்தில், அதுவுமல்ல, இதுவுமல்ல, சைவ சித்தாந்த முடிபே முடிந்த முடிபு மற்றைய முடிபெல்லாம் அதன் வியாபகப் பரப்பினுள் அடங்கியொதுங்குவன என அவற்றை இனங்கண்டு காட்டிச் சைவ சித்தாந்த முடிபை நிலைகண்டு நிறுத்த வந்தவர் மெய்கண்டதேவர் எனல் பொருந்தும். அவர் தமது மூன்றும் வயதிலிருந்தே தம்பணியை ஆரம்பித்தும் இவர் இரண்டாம் வயதிலேயே தம்பணியை முடித்து விட்டதும் ஆகிய வரலாற்றுண்மையின் ஒப்புநோக்கு நம் உணர்வுக்கு நல்விருந்தாகும். இருவரும் இவ்விப்பணிகளுக்கெனவே திருவருட் கொடையாகத் தோன்றிய அவதார புருஷர்கள் என்பதும் இவ்வொப்புமை நயத்தால் உணரத் தகும். அன்றியும் சைவஞானத்தின் இலக்கியக் கண்ணும் இலக்கணக் கண்ணுமாகிய இருபெரும் புண்ணியக் கண்கள் இவர்கள் என்ற காட்சிவிவேகம் நமக்கு இன்றியமையாததாகும். அதேவேளை திருஞானசம்பந்தரின் அருட்பாடல்களை மதித்துப் போற்றிப் படித்துவரும் அதே உள்ளுணர்வும் உத்வேகமும் நந்தமது மெய்கண்டார் அருள் நூலாகிய சிவஞானபோதத்தையும் விரும்பிப் படித்து விளங்கிக் கொள்ள வேண்டுதலும் இன்றியமையாததேயாம். படிக்குந் தறுவாயில் சிவஞானபோதத்தின் சீரிய அமைப்பொழுங்கைச் சற்றே சிந்தித்தல் தகும்.

## நாதசுர கான

(2-ம் பக்கத்து வளர்ச்சி)

அவ மேதை இவரென்றால் அத்தனையும் கானகலாநிதி நா. க. பத்மநாதன் அவர்களுக்குப் பொருந்தும்.

பரிசு பெற்றவரும் இவர் முதலிலே துர்க்கா தேவிக்கு அபிடேகம் உபயஞ் செய்து அன்னையை வணங்கியமையும் ஆங்கு அடியார்கள் அவர் பெற்ற பரிசு இன்பம் தாம் பெற்றதாகப் பாராட்டியதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

தில்லைப்பிரான் திருக்கூத்தைக் கண்டு களித்த பொழுது கவுணியர்கோன் சொல்லிய திருக்கடைக்காப்பு இங்கு எண்ணத்தக்கு எழுகின்றது,

திருச்சிற்றம்பலம்,
கோடல் கோங்கம் குளிர்கூவிளமாலை குலாயசீர்
ஒடு கங்கை ஒளிவெண் பிறைசூடும் ஒருவனார்
பாடல் வீணை முழவங்குழல் மொந்தை பண்ணாகவே
ஆடு மாறுவல் லானும் ஐயாறுடை ஐயனே".
திருச்சிற்றம்பலம்.

திருக்கூத்தில் அமையுக் அங்கங்களிலே குழலும் ஒன்று. வேய்ங் குழல, நாகசுரக் குழல் இன அஞ்சில, குழல் வாத்தியங்களே.

துர்க்கா தேவத்தானத்தாரால் 20-09-82 ல் கலாநிதி தா. க. பத்மநாதன் அவர்களுக்குப் பாராட்டும் பரிசம் விருந்துபசாரமும் நிகழ்ந்த வைபவத்திற்குத் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை தாங்கினர். பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. தருமலிங்கம் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களுட்படப் பலர் பாராட்டுரை ஆற்றினர்.

---

சித்தாந்த ஞானப் பொருட் பரப்பு முழுவதையும் செப்பமாக வரையறுத்துப் பன்னிரண்டு சிறு சூத்திரங்களிலே தெரிவிப்பது இந்நூல் ஒவ்வொர் சூத்திரமும் மேற்கண்டவாறு வேறுபட்ட முடிவுகளாக உள்ள மற்றுஞ் சமயக் கொள்கைகளை இனங்கண்டு காட்டிச் சித்தாப் பொருளைத்தெளிவாக அறிவிக்கும் திட்பமும் நுட்பமும் உடையது ஒவ்வொர் சூத்திரமும் எடுத்துக் கொண்ட பொருளின் உட்கூறுகள் எல்லாவற்றினூடும் அவற்றின் அந்தரங்க இணைப்பும் புலப்படத் தக்கவாறு அமைந்திருக்கிறது. சூத்திரங்களின் தொடர்பு முறையும் அவ்வாறே.

இனி ஒவ்வொரு சூத்திரத்தின் பொருட்கூறு ஒவ்வொன்றும் மேற்கோள், ஏது, உதாரணம் என்ற மூவகையால் தெளிய விளக்கப்பட்டுள்ளன, இவையின்றிச் சூத்திரப் பொருளின் ஆழ அகலம் காண்டல் துர்லபமாகும். அதனால்சூத்திரத்திற்குக் கொடுக்கப்படும் அதே தகைமையும் மதிப்பும் இவற்றுக்கும் உளதாகச் சைவமரபு போற்றி வருகின்றது. இவற்றின் தொடர்பில்லாது சூத்திரப் பொருளை மட்டுஞ் சுயவிவேகத்தினூற் கிரகித்துக் கொண்டு சுயவிருப்பத்துக் கேற்ப நிகழ்த்தும் விமர்சனங்கள் சைவசித்தாந்த உண்மைவிளக்கமதருவன ஆகா சூத்திரங்களுக்கிருக்கும் செய்யுட் சார்பான சொல்லமைதி பொருளமைதிகளும் கூர்ந்து நோக்கி ஆழ்ந்துணரவைக்கும் அதிசயகரமான ஆற்றலும் இவைக்கு முளளனவேயாம. இலக்கணத்தால் வேறு பாடில்லாத வழி இலக்கியம் பலவாதல் செல்லாது என்பது ஆன்றோரபிப்பிராயம். அவ்வண்ணமாயும், சூத்திரந்தான்செய்

(வளர்ச்சி 6 ம் பக்கம்)

[ 3 ஆம் பக்கத்து வளர்ச்சி ]

## இந்துக் கட்டடக் கலை

கப்படுகின்றன. பக்தி நெறியும் கடவுளை வழிபடுவதும் தொன்மையானவை. அது போன்றே தெய்வங்களுக்குக் கோயில் கட்டுவதும் மிகப்பழங் காலந்தொட்டே இருந்து வருகிறது. சமயத்தில் பரம்பொருளை உணர்வதற்கான வழியாகப் பத்தி நெறியைப் பரப்பக் கோயில்கள் மிக முயன்றிடங்களாயின.

**பௌத்தர்:**

இந்தியாவில் மூன்று பிரதான மதங்கள் கொள்கையைப் பரப்ப இச்சாதனத்தை (கோயில்களைப்) பயன்படுத்தின. முதலில் பௌத்தம் பரவலாகவும் பெருமளவிலும் இச்சாதனத்தைப் பயன்படுத்தியது. பௌத்தர்கள் ஸ்தூபங்களையும் தூண்களையும் எழுப்பினர். எடுத்துக் காட்டாக, சாஞ்சி, பார்ஃகூத், அமராவதி ஸ்தூபங்களைக் கூறலாம்; சாரநாத் தூண்களைக் கூறலாம். பௌத்த பிக்குகள் தங்களுக்கெனப் பாறைகளைக் குடைந்து இருப்பிடம் அமைத்தனர். அதற்குள் சைத்திய முற்றங்களை அமைத்து அவை ஒவ்வொன்றிலும் தமது வழிபாட்டுக்குரிய பிரதான சின்னமாகிய ஸ்தூபத்தை ஏற்படுத்தினர். புத்த பிக்குகள் வாழிடங்களாக விகாரைகளும் சைத்திய முற்றங்களும் கி. மு. 2 ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 7 அல்லது 8 ஆம் நூற்றாண்டுக்குள் ஏற்பட்டன. நாசிக், அஜந்தா, எல்லோரா, அவுரங்கபாத் குகைகள் குறிப்பிடத்தக்கன.

**சைனர்:**

இத்துறையில் சைனரும் பௌத்தர்களைப் பின்பற்றினர். இவர்களும் ஸ்தூபங்களை எழுப்பினர் எனக்கருத இடமுண்டு. சைனர் குகைக் கோயில்களும் அமைத்தனர்; மதுரா போன்ற இடங்களில் இவற்றின் இடிபாடுகளைக் காணலாம். குகைக் கோயில்களில் ஒரிசாவிலுள்ள கண்டகிரி, உதயகிரிக் குகைகளிலுள்ள கோயில்கள் முக்கியமானவை, சைனக் கோயில்கள் இந்தியாவில் பல்வேறு பகுதிகளிற் கட்டப்பட்டன.

**பாகவதர்:**

இந்தியாவில் இந்து மதக்கோயில்கள் அதிகம்; பாகவத மதத்தைக் கைக்கொண்ட ஹெலியோடோரஸ் என்ற யவனர் கருடத்துவஜம் ஒன்றை எழுப்பிய செய்தி கி. மு. 100 ஆம் ஆண்டைச் சேர்ந்த பேஸ்நகர்க் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. சங்கர்ஷணன், வாசுதேவன் ஆகியவர்களுக்குக் கோயில் கட்டப்பட்டது குறித்துக் கல்வெட்டுக்களிலிருந்து அறியமுடிகிறது. இதைப் போன்ற பல்வேறு சான்றுகளிலிருந்து இந்துக் கோயில்கள் பற்றி அறிய முடிகிறது. (வளரும்)

---

## சித்தாந்த பால பண்டித, பண்டித பரீட்சைகள்

சைவ பரிபாலனசபை நடாத்தும் சித்தாந்த பண்டிதர் தேர்வுகள்:-

விண்ணப்பம் அனுப்பும் இறுதி நாள் 31-10-82
பரீட்சை 29-12-82
31-12-82 வரை.

பாடவிதானம் — விண்ணப்பப் பத்திரம் தேவை ரூபா ஒன்று அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்:

x x x

சைவ பரிபாலனசபை நடாத்திய

### அகில இலங்கைப் பண்ணிசைப் போட்டி - 1982
### பரிசு பெறுவோர் விபரம்

**மேற்பிரிவு**

1. செல்வி லலிதாம்பிகை முருகையா (முதலாம் பரிசு) தங்கப்பதக்கம்
2. செல்வி கா. தமிழ்ச்செல்வி (இரண்டாம் பரிசு)

**மத்தியபிரிவு**

செல்வி ஸ்ரீஞானபூஷணி - சிவசுப்பிரமணியம் முதலாம்பரிசு தங்கப்பதக்கம்

2. ,, கிருஷ்ணபவானி கணேசன் [இரண்டாம் பரிசு]
3. ,, ஜெயஸ்ரீ தில்லையம்பலம் [மூன்றும் பரிசு]

**கீழ்ப்பிரிவு**

1. செல்வி சுஜாதா பத்மசிவமணி முதலாம் பரிசு தங்கப்பதக்கம்
2. ,, மஞ்சுளா கனகரத்தினம் இரண்டாம் பரிசு
3. ,, நாமகள் மகேசன் மூன்றும் பரிசு

தங்கப்பதக்கப் பரிசு நன்கொடையாக வழங்கியவர்
திரு. S. துரைராசசிங்கம் அவர்கள்
ஆநந்தக்குமாரசாமி ஞாபகார்த்த நிதி

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்
துந்துபி ஞு புரட்டாதி மீ 17, 24-9-82 வெள்ளி

## ஒரே ஒரு வழி உலகம் உய்ய!

'வையகம் துயர் தீர்க' என்று திருவாய் மலர்ந்த திருத்தொண்டர் 'தீயதெல்லாம் ஆழ்க' என்றும் எடுத்துச் சொல்லி 'அரன் நாமமே சூழ்க' என்று வழியையும் தொட்டுக் காட்டியிருக்கின்றதைச் சற்று உற்று நோக்குவோமேயானால் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை உணர்ச்சி ஊற்றெடுக்கும் என்பதற்கை ஐயமேயில்லை.

துயரமும் துன்பமும் உலகிலே தொடர்வது என்றுமே யுள்ளதோர் விபரீதம். அவ்வாறு ஓர் அவல நிலைமை யுண்டாகும்பொழுதெல்லாம் அந் நிலை மாறுவதற்கு இறை வழிபாடொன்றே ஏற்ற வழி என்பதைச் சென்றகால நிகழ்ச்சிகள் எல்லாம் காட்டாநிற்கின்றன. புராணங்கள் இப்பொருள் பற்றிப் பொருத்தமாகக் கூறுகின்றன. அற்புதங்களென்று சொல்லப்படும் தெய்வீக நிகழ்ச்சிகளைத் திருமுறை தந்த குரவர்கள் தொட்டு அவற்றால் எழுந்த பாடல்களைச் சுவை பெறச் சொல்லியிருக்கின்றனர்.

சைவமாஞ் சமயஞ் சார்ந்த எம் முன்னோர் வேத சிவாகம மெய்கண்ட சாத்திரங்களைப் பிரமாண நூல்களாகக் கொள்வதுடன் திருமுறைகள் புராணங்கள் மத சம்பந்தமான இதிகாசங்களையெல்லாம் செம்மை நெறிக் குரியனவாகக் கொண்டு வாழ்ந்திருக்கின்றனர். எனவே ஆன்றோரின் அநுபவத்திலெழுந்த நடைமுறைகள் நாம் அல்லலுறும்போதெல்லாம் பயன்படுத்தக்கூடிய பாடங்களாக எங்களுக்கு உதவுந் தரத்தன என்பது தெளிவாகின்றது.

சூரரை அசுரர்கள் துன்புறுத்தியபொழுது ஒரு திருமுருகன வந்து ஆங்கு உதித்தனன். எற்றுக்கு? உலகம் உய்ய, தேவர்கள் மட்டுமல்ல, மானுட மனிதர்களும் மற்றும் யாவரும் உய்ந்து கடைத்தேற வேண்டும் என்பதே இதன் நோக்கம் எனலாம். 'தீயதெல்லாம் ஆழ்க' என்ற வேண்டுகோள் அன்று எழுந்தது. அதற்கு முழுமுதல் ஒரு திருமுருகன மூர்த்தமாய்த் தோன்றவே துன்புற்றோர் எல்லோரும் அரன் நாமம் சூழ்ந்தனர். ஈற்றில் அசுரரும் ஈசன் நாமத்தை எடுத்தியம்பினர். அவ்வாறு போற்ற மானம் ஒன்று தடுத்தது என்று அஞ்ஞானம் நீங்கா நிலையிலே சூரனும் சொன்னான். ஆனால் அவன் முன் செய் புண்ணிய முனைப்பினாலே சிந்தை தெளிந்தான். சிந்தனை செய்ததை நினைத்தலமந்தான். திருப் பெருவடிவத்தை உருப்படியாகக் கண்டான். காதலித்தான், கருணைக்காளானான்.

அது அன்று: அதன் பின் பலப் பல வேளைகளிலே ஞானிகள் தோன்றி இத்தகைய ஒளிபரப்பினார்கள். அரன் நாமத்தைச் சூழ வைத்தனர். அவ்வக்காலங்களில் ஆறுதல் எழுந்தது. தீயதும் ஆழ்ந்தது.

இந்த நூற்றாண்டிலே இறை நாமத்தை எண்ணிய படி எக்கருமத்தையும் ஆற்றி வந்த காந்திப் பெரியார் மானிடச் சிப்பிக்குள்ளே வந்த முத்துப் போல, ஏனையவர்கள் எல்லோரும் இன்னற்படாது இவ்வுலகில் வாழவழி இறைநெறி ஒன்றே என எடுத்துக்காட்டி முன்மாதிரியாக வாழ்ந்தார். இறை நெறி என்றால் உண்மை நெறி என்ற பேருண்மையை விளித்துரைத்தார்.

அறநெறி அமைப்பை இலக்கண இயல் போல் எடுத்துத் திருக்குறள்மூலம் தெருட்டிய தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் யாதொன்றும் தீமையிலாத சொலலே வாய்மையாகும் என்றனர். இந்த ஒரு சுலோகம் எந்த நிலைமைக்கும் பொருந்துவது. தீமை பயக்காததொன்றையே அறிஞர்கள் செப்புவர். அரசியலில் இது மிகவும் வேண்டற்பாலது. பயனில் சொல் பாராட்டுவாரும் தீயன சொல்வாரும் அரசியல் நடத்துவரின் பயபயது பயங்கரமே. காந்தியம் என்று அன்புடன் வர்ணிக்கப்படும் அன்புநெறி இந்தக் கருத்தையே கொண்டிருக்கின்றது. தன்னெஞ்சறியப் பொய்யாதவர் அந்த அரசியற்றுறை ஞானி மகாத்மா. அவர் உளத்தாற் பொய்யாதொழுகினார்; உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளரானார். மனத்தொடு வாய்மை மொழிந்தார், சமூகவியற்றுறைச் சேட்டரானார். போற்றாம் பொய்யாமை பேணி வாய்மையால் அகந் தூய்மையால், பொய்யாமை என்ற ஒளி உள்ளும் புறம்பும் வீசும் தேசுடையராய் வாழ்ந்தார்.

வள்ளுவநாயனார் எவ்வாறு

"யாமெய்யாக் கண்டவற்றுள்
இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"

கண்டாரோ அக்கருத்தின் பொருத்தத்தை மாநிலம் மகாத்மாவின் வாழ்விலே கண்டு களித்தது. கருத்திற் கொண்டது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்.

இறைவன் அலகில் சோதியன் என்றார். உண்மையே உருவானவன் என் பதே. இருள் நீங்கி, மருள் போகி ஒளிகாண உண்மை பேண இறைநெறி வேண்டும். இந்த நெறிதான் அந்தச் சமய குரவர்கள் தந்த நெறி. அந்நெறியின் நின்றால் அல்லலுறுவோமா?

இந்நாட்டை அந்நாளில் இராணுவ ஆணவத்தால் ஆண்ட போத்துக்கேயர் 'பசுவைக் கொல்' என்று படுபாவக் கட்டளையிட, பதைபதைத்துப் பறந்தோடினார் ஞானப்பிரகாசர். அந்தமகான் இருந்த நோன்புக்கிடமாகிய இந்த இலங்கையிலே அந்நியர்கள் ஆக்கொலை புரிந்து மாப்பழி செய்யவில்லை; இலங்கையரே இப்படு கொலை செய்கின்றனர் — உலகம் உய்யுமா? மாரியிற்றானும் மழை பெய்யுமா? ஊனுணவுக்கு ஒரு இடம் எங்கள் ஊர் என்று சொல்லும் அளவுக்கு ஞானப்பிரகாச சுவாமிகள் அன்று எதை இல்லாமற் செய்யத் தவமிருந்தாரோ அது இன்று வாழ்க்கைமுறையிலே இன்றியமையாது தொன்றுயிற்றே! என்னே, என்னே மாநாடு கூடும் இவ்வேளை அந்த 'ஆ' பாடுபற்றி எடுக்கும் ஒழுங்கென்ன? என்று தானாக எழுகின்றது ஒரு கேள்வி.

ஆ உரிப்பாரும் ஆ உரிபபோர் அளிக்கும் ஊனை உண்பாரும் ஞானப்பிரகாச முனிவர் நல் வழி காட்டிய நாட்டில் இடம் பெற முடியுமா?

உ

## சைவப்புலவர் பரீட்சைகள்

சைவப்புலவர் சங்கம் நடாத்தும் சைவப்புலவர் பரீட்சை நவம்பர் மாதம் நடைபெறும்.
விண்ணப்ப இறுதிநாள்: 31-10-82
பாடவிதானம்—விண்ணப்பப் பத்திரம் தேவையானோர் ரூபா 2. அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் என்று பரீட்சைச் செயலாளர் 125, அரசடி வீதி (யாழ்ப்பாணம்.) அறிவிக்கின்றனர்.

## தலைமுறை பல கண்ட …………

[ 2 ஆம் பக்கத்து வளர்ச்சி ]

வாத்தியத்தோடு நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு வந்து குத்து விளக்கை அங்கே வைத்து சபையை ஆரம்பித்தார்கள்.

11 9-1889 ல் தமிழில் "இந்துசாதனம்" எனவும் ஆங்கிலத்தில் Hindu Organ எனவும் முறையே நாமமிட்டு இருவாரங்களுக்கொருமுறை புதன்கிழமை தோறும் தங்கள் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற்றானே அச்சிட்டுப் பிரசுரம் செய்து வருவாராயினர்.

திருவனந்தபுரத்தில் உயர்தர நீதிபதியாகக் கடமையாற்றிய யாழ்ப்பாணம் ஸ்ரீ த. செல்லப்பாபிள்ளையவர்கள் ஆங்கில ஆசிரியராகவும் நல்லூர் ஸ்ரீமத் கைலாசபிள்ளை யவர்கள் சைவப்பிரகாச அச்சியந்திரசாலை அதிபராகவும் தொண்டாற்றி வந்தனர்.

1879 ல் இப்பத்திரிகை தமிழ்ப் பிரசுரம் வேறாகவும் ஆங்கிலப் பிரசுரம் வேறாகவும் பிரிந்து தமிழ்ப் பத்திரிகை இருவாரத்திற் கொருமுறையும் ஆங்கில பத்திரிகை வாரத்திற்கொரு முறையும் வெளியிடப் பெற்று வந்தன.

1918 ம் ஆண்டில் இந்துசாதனமும் Hindu Organ என்ற ஆங்கிலப் பத்திரிகையும் வாரத்திற்கு இருமுறை பிரசுரிக்கப் பெற்றன. அந்தக் காலம் சைவபரிபாலன சபையின் பொற்காலம் எனக் கூறலாம்.

சைவபரிபாலன சபையின் முதல் தலைவராக திரு. ந. ச. பொன்னம்பலபிள்ளையும், முதற் காரியதரிசியாக திரு. த. கைலாசபிள்ளையும் முதல் தனாதிகாரியாக திரு. மு. பசுபதிச் செட்டியாரவர்களும் கடமையாற்றினார்கள்.

1939 ம் ஆண்டு தொடக்கம் சைவ மகா நாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்தியாவிலிருந்து பல சைவப் பெரியார்கள் இந்த மகாநாடுகளில் பங்குபற்றி அரிய சொற்பொழிவாற்றியிருக்கிறார்கள்.

இக்காலத்திலும் சைவ பரிபாலனசபை பல துறைகளிலும் தொண்டாற்றி வருகின்றது. சித்தாந்த வகுப்புக்கள், தேவாரவகுப்புக்கள், புராண படனம், சிவபூசை மகாநாடு, குருபூசைகள், தீக்ஷைகள் முதலிய சத கருமங்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன. சபையார் கல்லூரி வீதியில ஒரு நிலத்தை வாங்கி நாவலராச்சிரம மண்டபம் அமைத்திருக்கிறார்கள். மேற் கூறிய கருமங்கள் இந்த மண்டபத்தில் நடைபெறுகின்றன.

தற்பொழுது தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் இரண்டிற்கும் ஆசிரியராக வேதனமின்றி திரு. நம சிவப்பிரகாசம் அவர்கள் திறம்பட நடாத்தி வருவது பாராட்டுக்குரியது.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

## சிவஞானபோதம்

( 5-ம் பக்கத்து வளர்ச்சி )

கண்டார் படைப்பு என இன்று சிலர் சிரிட்டத்தில் தலைதூக்கும் வாதம் உண்மைக்குப் புறம்பானதாகும். வாதப் பிரதிவாதங்களினால் இவ்வாதத்துக்குத் தீர்வு ஏற்படுமாறில்லை. இவற்றினையும் ஆரத் திரப்படித்துணரும் அநுபவச் சுவையொன்றே இதற்குத் தகுந்த சிகிச்சையாய் அமையும். இந்நெறியிற் பிசகாது முன்னேறுவோமாக.

## சைவத்தைப் பேணும்

[ 1 ஆம் பக்கத்து வளர்ச்சி ]

வொன்றே என்று கூறினும் அது முற்றிலும் பொருந்துவதாகும்.

கோயில் உற்சவங்கள், நாயன்மார்கள் குருபூசை, சைவப் பெரியார்களின் தெய்வ சிந்தனைகள், இன்னும் பல சைவ நுண்பொருளாய தத்துவங்கள் என்பவற்றை இவ்விதழின் வாயிலாக நாம அறிகிறோம். எனவே இந்த உயர்ந்த புண்ணிய கைங்கரியத்தை யாற்றும் இந்துசாதனத்தை வாழ்த்துவதும் அதன் கௌரவ ஆசிரியராக பணிபுரியும் திரு நம. சிவப்பிரகாசம் அவர்களைப் பாராட்டுவதும் சைவ மக்களின் இன்றியமையாத கடமையாகும். இன்னும் பல்லாண்டு பல்லாண்டு காலம் 'இந்துசாதனம்' வெளிவந்து சைவ மக்களின் உள்ளங்களை மலர்விக்க வேண்டுமென்று திருவருளைத் துதிக்கிறேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி
தெல்லிப்பழை.

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 430, K. K. S. Road, Vannarponnai, Jaffna ( Telephone: 356 ) on Friday, 17, 24-9-82

Editor-in-Chief:
R. N. Sivapirakasam

